18.10.2008 சென்னை தமிழ் ஓசை

# ஆர்ப்பாட்டம்

சென்னை, அக். 18-

சென்னைப் போரூர் ஏரியிலிருந்து அகற்றப்பட்ட மக்களுக்கு மாற்று இடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திப் பசுமைத் தாயகம் உள்ளிட்ட அமைப்புகளின் சார்பில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சென்னை நினைவரங்கம் அருகில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில், பசுமைத் தாயகம் அமைப்பின் செயலாளர் இரா. அருள், சிறில் அலெக்சாண்டர், 'கனல்' கண்ணன் மற்றும் போரூர் ஏரியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அக்டோபர் 17 ஆம் தேதி மக்களை அப்புறப் படுத்துவதற்கு எதிரான நாளாகவும், வறுமை ஒழிப்பு நாளாகவும் கொண்டாடப்படுவதையொட்டி இப்போராட்டம் நடத்தப்பட்டது.

போரூர் ஏரியிலிருந்து அகற்றப்பட்டு மாற்று இடம் வழங்கப்படாத மக்களுக்கு உடனடியாக இடம் வழங்கப்பட வேண்டும். அவர்களின் குழந்தைகளுக்குப் பள்ளி வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் குடிநீர், மின்சாரம், துப்புரவு உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட வேண்டும். நல்ல சாலைகள் அமைத்துத் தர வேண்டும். நல்லூர், கூடப்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட மக்களுக்கு இன்னும் வீடுகள் கட்டித் தரப்படவில்லை. எனவே அவர்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தர வேண்டும் என்று இப்போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.




சென்னைப் போரூர் ஏரியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மக்களுக்கு மாற்று இடம் வழங்கக் கோரி பசுமைத் தாயகம் உள்ளிட்ட அமைப்புகளின் சார்பில் சென்னை நினைவரங்கம் எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## பொது இடத்தில்
# புகைபிடித்த 61 பேருக்குத் தண்டம்

காஞ்சிபுரம், அக். 18-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொது இடங்களில் புகைப்பிடித்தல் தடைச் சட்டத்தின்கீழ் 61 பேர் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்து ரூ.5,700 தண்டம் பெறப்பட்டது.

காந்தி பிறந்தநாளான அக்டோபர் 2-ஆம் தேதி முதல் பொது இடங்களில் புகைப்பிடிப்பதைத் தடை செய்யும் சட்டத்தை நடுவணரசு செயல்படுத்தியது. அதன் எதிரொலியாக பல்வேறு இடங்களில் நலவாழ்வுத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 7 ஒன்றியங்களில் காஞ்சிபுரம், வாலாசாபாத், திருப்பெரும்புதூர், உத்திரமேரூர், மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம், குன்றத்தூர் ஆகிய இடங்களில் கடந்த ஒரு வாரகாலமாக நடந்த ஆய்வில், பொது இடங்களில் புகைபிடித்த 61 பேர் பிடிபட்டனர். இவர்களிடம் இருந்து ரூ.5,700 தண்டம் பெறப்பட்டது. இதேபோல் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், செவிலிமேடு பேரூராட்சி உள்ளிட்ட இடங்களில் நலவாழ்வுத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தித் தண்டம் பெற்றனர். மேலும் அனைத்து இடங்களிலும் புகைபிடித்தல் தடைச் சட்டம் குறித்த விளம்பரப் பலகைகளை அதிகாரிகள் பொதுமக்களின் பார்வைக்காக வைத்துச் சென்றனர்.